இந்தியத் தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

**<u>செய்தி அறிக்கை</u>**

**<u>பொது உபகாரச் சம்பளம் திட்டத்தின் கீழ்</u>**
**<u>2017-18ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை</u>**

**<u>விண்ணப்பத்திற்கான இறுதிநாள் : 23.01.2017</u>**

இந்தியாவில் இளங்கலை, முதுகலை, முனைவர் அல்லது நடனம்&இசை துறையில் கல்வி பயில விரும்பும் மலேசிய மாணவர்கள், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் 2017-18ஆம் ஆண்டிற்கான பொது உபகாரச் சம்பள திட்டத்தின் (General Scholarship Scheme) மூன்று (3) கல்வி உபகாரச் சம்பளத்தில் ஏதேனும் ***<u>ஒன்றுக்கு</u>*** விண்ணப்பிக்கலாம்.

2. விண்ணப்பதாரர்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறையில் கல்வியைத் தொடர, பல்கலைக்கழகம்/கல்லூரி இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பல்கலைக்கழகத்திற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் முறையாக சமர்ப்பிக்கவும் வேண்டும். **இதுவரை இந்தியாவில் கல்வி பயிலாத விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.** பொறியியல், கட்டிடக்கலை, மனிதநேயம், கலைகள், வர்த்தகம், மேலாண்மை, வணிகமும் நிர்வாகமும், பத்திரிக்கை துறை, ஹோட்டல் மேனேஜ்மெண்ட், விவசாயம், கால்நடை அறிவியல், கால்நடை வளர்ப்பு, அறிவியல், சட்டம், நடனம் மற்றும் இசை துறை உட்பட இந்த கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

3. மருத்துவம், பல் மருத்துவம், தாதியர், இயன் மருத்துவம் போன்ற மருத்துவம் தொடர்பான துறைகளுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படாது.

4. இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களின் பட்டியல்; தேர்வு செய்யப்படவிருக்கும் துறைகளின் விவரங்கள் மற்றும் அடிப்படை தகுதிகளை பற்றி விரிவாக அறிந்து கொள்ள விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் இணையத்தளைத்தைப் (www.ugc.ac.in) பார்க்கவும். விண்ணப்ப படிவத்தில் குறிக்கப்படும் மதிப்பெண்கள் அனைத்தும் ***விழுக்காடு (%)*** அடிப்படையில் இருக்க வேண்டும். கடப்பிதழின் பிரதி, சான்றிதழ்/ எழுத்துப்படிகள் மற்றும் ஆங்கில மொழியில் இல்லாத ஆவணங்களின் (சான்றளிக்கப்பட்ட) மொழிப்பெயர்ப்பு ஆவணங்கள் அனைத்தும் விண்ணப்ப படிவத்தோடு சமர்ப்பிக்க வேண்டும்.

5. இந்திய அரசின் கலாச்சார உறவுகளுக்கான சபையின் (ஐ.சி.சி.ஆர்.) மலேசிய மாணவர்கள் தற்போது பயிலும் பல்கலைக்கழக பட்டியலை பின்வரும் இணைப்பில் காணலாம். <www.indianhighcommission.com.my/Pdf/UnivsICCRstusStudying2016-17.pdf>

6. ***விமான பயணச்சீட்டை தவிர,*** தனிப்போதனைக்கான கட்டணம், தங்கும் விடுதி கட்டணம், கான்டின்ஜெண்ட் மானியம், ஆய்வுக்கட்டுரை&ஆராய்ச்சி கட்டுரைக்கான செலவு மற்றும் மருத்துவம் நன்மைகள் இந்த கல்வி உதவித்தொகைக்குள் அடங்கும்.

7. முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவத்தை ***PDF வடிவில்*** edu1.kl@mea.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

8. தேவையான ஆவணங்களுடன் சேர்த்து, 5 கூடுதலான பாஸ்போர்ட் அளவிலான புகைப்படங்களையும் இணைத்து விண்ணப்பத்தின் அச்சு நகலை எதிர்வரும் ***23.01.2017ஆம் தேதிக்குள்*** கீழ்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

Education Wing **(GSS Scholarship)**,
High Commission of India,
Menara 1 Mon't Kiara,
Level 28, No. 1, Jalan Kiara,
Mont' Kiara, 50480 Kuala Lumpur.

தொலைபேசி : 03 6205 2350 ext 203
மின்ஞசல் : edu1.kl@mea.gov.in
இணையதளம் : www.indianhighcommission.com.my

9. பொது உபகாரச் சம்பள திட்டத்தின் (General Scholarship Scheme) விண்ணப்பபாரத்தை www.indianhighcommission.com.my/Pdf/GSS2017-18ApplicationForm.pdf என்ற இணைப்பில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

****